Arbeiderpartiet

TAMIL



# Nå er det *vanlige* folks tur!

# இப்பொழுது சாதாரண குடிமக்களின் சந்தர்ப்பம்!

கடந்த 8 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசாங்கம் சமுதாயத்தில் வேறுபாடுகளை அதிகரித்து அத்தோடு  அதிக வளத்தை ஏற்கனவே கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. இப்பொழுது சாதாரண மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும்!

- «அனைவருக்கும் வேலைவாய்ப்பு» என்பது தொழிலாளர் கட்சிக்கு அதி முக்கியமான ஒரு விடயமாகும். பலருக்கு சிறந்த மற்றும் உறுதியான வேலைவாய்ப்புகள் இருக்கும் சமுதாயமே, நியாயமான ஒரு சமுதாயம் ஆகும். நாடு முழுவதும் உறுதியான சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம்.
- நீங்கள் எங்கு வசித்து வந்தாலும் அல்லது உங்களுடைய வசதி எவ்வகையாக இருந்தாலும், உங்களுக்காக சமுதாயம் ஒன்றிணைந்து தோள் கொடுக்கும் என்பதற்கு தொழிலாளர் கட்சியாக உத்திரவாதம் கொடுக்கின்றோம். நீங்கள் சுகவீனம் அடைந்தால் அல்லது முதியோர் பருவத்தை அடையும் பொழுது உதவி பெறுவதற்கு பாகுபாடு அற்ற வாய்ப்புகள் இருக்க வேண்டும். ஆகையால் பாடசாலைகளில் போதிய அளவில் ஆசிரியர்களும், அத்தோடு சுகயீனம் உற்றவர்கள் மற்றும் முதியோர்களை பாதுகாக்க போதிய அளவில் ஊழியர்களும் இருக்கவேண்டும் எனவும் விரும்புகிறோம்.
- நாம் நோர்வே நாட்டின் சூழல் நல இலக்கை அடைவோம்! உற்பத்தி கழிவுகளை குறைத்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி நியாயமான வகையில் சூழல் நல அரசியலை செயற்படுத்துவோம்.

பாரிய கடமைகளை நாம் ஒன்றுபட்டு திறமையாக தீர்ப்போம்.

புரட்டாதி மாதம் 13ம் திகதி அன்று தொழிலாளர் கட்சிக்கு வாக்களியுங்கள்!

நோர்வே நாட்டில் குடியுரிமையுள்ள அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம், மேலும் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை இருந்தால் மட்டும் போதும்.

Arbeiderpartiet